

# இடம் பொருள் கலைஞர்

78

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்!**









# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்!



## நவீன நகரத்தின் திட்டமிட்ட விரிவாக்கம்!

கிராமம் - நகரம் - மாநகரம். இப்படி மூன்று விதமான இடங்களில் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இது இந்தியாவில், 90-களில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அமல்படுத்தப்படுவதற்கு முன்பு இருந்த நிலை. சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வரிசையில் இன்னொரு சொல் இடம் பிடித்திருக்கிறது. 'கிராமம் - நகரம் - மாநகரம் - பெருநகரம் (VILLAGE-TOWN-CITY-METROPOLITAN)'. ஆம்... அதற்குப் பெயர்தான் வளர்ச்சி!

இந்தியாவின் அந்த வளர்ச்சிப் பாதையில், தமிழ்நாடு 70-களிலேயே இணைந்துவிட்டது என்று சொன்னால், அதை நம்புவது பலருக்கும் கடினமாக இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. ஏனென்றால், 1972 -ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக அரசால், 'சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுவிட்டது.

வசதி, வாய்ப்பு, பொழுதுபோக்கு போன்றவற்றின் காரணமாக, கிராமத்திலிருந்தும் சிறு நகரங்களிலிருந்தும் மக்கள் பெருநகரங்களை நோக்கி, இடம் பெயர்ந்தபடியே இருக்கிறார்கள்.

**இப்படியாக வருங்காலத்தைத் திட்டமிட்டு, கட்டமைப்புகளை ஏற்படுத்தியதால்தான் தலைநகரம் திடமாக இருக்கிறது..!**

இதனால், நகரங்களில் கூடுகிற மக்கள் தொகையால் அந்ந நகரத்தின் சூழல் மற்றும் இதர வளங்கள் ஆகியவற்றின் மீது அழுத்தமும், அதனால் ஏற்படும் பாதிப்பும் அதிகரிக்கின்றன.

அதைத் தவிர்க்க வேண்டியே நகரங்களில் இருக்கிற வசதிகளை, கிராமங்களுக்கும் கொண்டு வரும் நகர்மயமாக்கல் பணிகள் எல்லா அரசுகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு போல திட்டமிட்ட நகர விரிவாக்கத்தை வேறு எந்த அரசும் செயல்படுத்துவதில்லை என்பதுதான் நிதர்சனம். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுதான் 'எம்.எம்.டி.ஏ' என்று அழைக்கப்படுகிற சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்.

### தொல்லைகளைத் தடுத்த தொலைநோக்கு

இந்தியாவிலேயே குடும்ப நலத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்திய, செயல்படுத்தி வரும் மாநிலம் தமிழ்நாடு. இருந்தாலும், மாநிலத் தலைநகரான சென்னையில் புதிதாகக் குடியேறுபவர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்தபடியே இருக்கிறது. இதனால் இட நெருக்கடியும் ஏற்படுகிறது.

ஒவ்வொரு பெரிய நகரத்தின் மக்கள்தொகை, இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இரண்டு மடங்காகப் பெருகுவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 1970-களில் சென்னையின் மக்கள் தொகை 25 இலட்சம். அது 1991-இல் 58 இலட்சமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டது.

அப்போது பெரிய அளவில் இடநெருக்கடி, போக்குவரத்து நெரிசல் ஆகியவை ஏற்படும் என்றும், அவற்றைச் சரியான முறையில் கையாளவும் அன்றைய கலைஞர் அரசு தொலைநோக்குடன் சிந்தித்ததன் விளைவுதான் 'மெட்ராஸ் மெட்ரோபொலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி' எனும் எம்.எம்.டி.ஏ. அமைப்பு. இதுதான் பின்னாளில் 'சி.எம்.டி.ஏ.' அதாவது, 'சென்னை மெட்ரோ பொலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி' (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்) என்று பெயர் மாறியது. அந்த அமைப்பு செய்த விரிவாக்கம்தான், சென்னை, அரும்பாக்கத்தில் உள்ள எம்.எம்.டி.ஏ. பகுதிகள்.

### முன்னேற்றத்தின் 'மாஸ்டர் பிளான்'

மக்கள் தொகைப் பெருக்கத்தை மதிப்பிடல், விரிவடையும் பகுதிகளை வரைமுறைப்படுத்தல், தொழில் வளர்ச்சிக்கேற்ற கருத்துகளை எடுத்துரைத்தல், ஊர்ப்புறங்களை வளர்ச்சியுறச் செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு சி.எம்.டி.ஏ செயலாற்றி வருகிறது.

1971-1975-க்கு இடைப்பட்ட காலத்தில் எம்.எம்.டி.ஏ. சென்னைப் பெருநகர் வட்டாரத்தைப் பற்றித் தேவையான ஆய்வுகளைச் செய்து, 'மாஸ்டர் பிளான்' ஒன்றைத் தயாரித்தது. அதன்படி, சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மக்களுக்கு வீடுகளை வரைமுறைப்படுத்திக் கட்டிக் கொடுக்கப்பட்டன.

சுமார் 1,170 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட அந்தச் சிறப்புத் திட்டத்தில், சென்னைப் பெருநகரில் சைதாப்பேட்டை வட்டம், பொன்னேரியின் ஒரு பகுதி, திருவள்ளூர், திருப்பெரும்புதூர், செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த சில பகுதிகள் ஆகியவை அடங்கியிருந்தன. மேலும், திருவொற்றியூர், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய நான்கு நகராட்சிகளும், கத்திவாக்கம், மாதவரம், அம்பத்தூர், ஆவடி ஆகிய நான்கு நகர்களும், 20 நகரப் பஞ்சாயத்துக்களும், பல்வேறு கிராமங்களும் இந்தத் திட்டத்தில் அடங்கியிருந்தன.

### சட்டத்தின்படி நகரக் கட்டமைப்பு

இந்த 'மாஸ்டர் பிளான்', நிலங்கள், கட்டடங்கள் ஆகியவற்றை ஒழுங்கு படுத்துவதோடு, குடிநீர் வழங்குதல், வடிகால், வீட்டுவசதி, கல்வி, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு, தொழில், வேளாண்மை ஆகியவற்றையும் கவனத்தில் கொண்டது.

தமிழ்நாடு நகர் அமைப்புச் சட்டம், சென்னை நகரில் 1920-முதல் அமலில் இருந்தபோதிலும், இந்த 'மாஸ்டர் பிளான்' கொண்டு வரப்பட்ட பிறகுதான் அந்தச் சட்டம் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்கு முன்பு வரை சென்னையில் 15 சதவிகித மக்கள் தொகையினர் மட்டுமே அந்தச் சட்டத்தின்படி நடந்தார்கள்.

இப்படியாக வருங்காலத்தைத் திட்டமிட்டு, கட்டமைப்புகளை ஏற்படுத்தியதால்தான் தலைநகரம் திடமாக இருக்கிறது..!


**...வலம் வருவோம்**

### மணலி முதல் மறைமலை நகர் வரை!

தமிழ்நாடு அரசால் 1972-ஆம் ஆண்டு நவம்பரில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், 1975-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சட்டப்பூர்வமான அமைப்பாக மாறியது. அதனைத் தொடர்ந்து, மணலிப் பகுதியில் 420 ஏக்கர் நிலத்தை வாங்கி, அங்கு மனைகளை ஏற்படுத்தியது. மேலும், மறைமலை நகர் என்ற புதிய பகுதியை 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் வளர்த்தெடுக்கவும் செய்தது.

எம்.எம்.டி.ஏ.வின் மாஸ்டர் பிளான் மூலம் ஊர்க்கடை முதல் உயர் அங்காடிகள் வரையும், ஆரம்ப, உயர்நிலைக் கல்விக் கூடங்களும், கல்லூரிகளும், திறந்தவெளிகளும், பூங்காக்களும் உருவாக்கப்பட்டன. அன்றைக்கு மணலியில் எம்.எம்.டி.ஏ. மனைகள், ஒரு கிரவுண்ட் ரூ.8,500-க்கு விலைபோயின. அந்தத் தொகையை தவணை முறையில், ஆறரை ஆண்டுகள் வரை செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

### உன்னத மனிதரின் சாதிப் பெருமை!




"விவேகானந்தர் செப்டம்பர் 11, 1893 அன்று சிகாகோவில் நடந்த 'மதங்களின் பாராளுமன்ற'த்தில் ஆற்றிய உரையின் மூலம் அமெரிக்காவிற்கு இந்து மதத்தை அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அவருடைய நாவன்மை ஏற்படுத்திய பெரும் தாக்கத்தின் காரணமாக, மேற்கத்திய உலகில் அவர் மூன்று ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டியிருந்தது. முதல் வெளிநாட்டுப் பயணத்திற்குப் பிறகு, ஜனவரி 16, 1897 அன்று அந்த 33 வயது நிரம்பிய துறவி மெட்ராஸ் மாகாணத்திலிருந்த புனிதத் தலமான ராமேஸ்வரத்தில் ஒரு வீரனுக்குரிய வரவேற்பினைப் பெற்றார். அந்த வரவேற்பினை, ஏற்பாடு செய்தவர் மதுரை மாவட்டத்திலிருந்த ராமநாதபுரத்தின் ராஜாவான பாஸ்கர சேதுபதி என்கிற ஜமீன்தார்.

தனக்கு அளிக்கப்பட்ட 'வரவேற்புரை'க்கு பதிலளித்த விவேகானந்தர் தன் ஆன்மிக வெற்றிக்கான பெருமையை சேதுபதியுடன் பகிர்ந்து கொண்டார்.

'சிகாகோவுக்குச் செல்லும் எண்ணத்தை என் சிந்தனைக்குள் விதைத்தவர் ராஜாதான் என்பதும், அவர்தான் இந்தப் பயண காலம் முழுவதிலும் இதயப்பூர்வமாகவும், தன் செல்வாக்கின் மூலமாகவும் ஆதரவளித்தார் என்பதும் உங்களில் பெரும்பாலோருக்குத் தெரிந்திருக்கலாம். எனவே, இந்த வரவேற்புரையில் என் மீது பொழியப்பட்ட புகழில், கணிசமான அளவு தென்னிந்தியாவின் உன்னத மனிதரான இவருக்குத்தான் செல்ல வேண்டும்.'

சுமார் நான்கு மாதங்களுக்குப் பிறகு, இந்த உன்னத மனிதர் பாரம்பரியமாக அறங்காவலராக இருந்து வந்த ஒரு கோவிலுக்குள், சில கீழ் ஜாதியினர் தடைகளை மீறி நுழைந்து விட்டனர் என்று வழக்குத் தொடுத்தார். அவர்களின் கோவில் நுழைவுக்கு எதிராக வன்முறை நடந்தது."

பத்திரிகையாளர் மனோஜ் மிட்டா எழுதிய CASTE PRIDE என்கிற நூலிலிருந்து இந்தச் செய்தி நமக்குக் கிடைக்கிறது. எதிர் பதிப்பக வெளியீடாக விரைவில் தமிழில் 'ஜாதிப் பெருமை' எனும் தலைப்பில், வெளியாகவுள்ள இந்த நூலை மொழிபெயர்த்த பத்திரிகையாளர் விஜயசங்கர் இந்தக் குறிப்பைத் தனது ஃபேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

### ஃப்ளாஷ்பேக்



மா.சின்னப்பா



**வெற்றித் தருண வாழ்த்து!!**

1989-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்த நேரத்தில், கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் விழுப்புரம் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். தளபதி தங்கி இருந்த உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு விடுதியில், அவரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக அவர் வெற்றி பெற்றிருந்தார் என்பது எங்களுக்கு கூடுதல் உற்சாகத்தை அளித்தது.

**- மா.சின்னப்பா,**
**ஒன்றிய விவசாய அணித் துணை அமைப்பாளர்,**
**மன்னார்குடி மேற்கு ஒன்றியம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**கிராமத்தில் நடந்த மாநாடு!**

1958-ஆம் ஆண்டு, பிப்ரவரி 15, 16 நாட்களில் சேலம் மாவட்ட 3-வது மாநாடு, ஏற்காடு செல்லும் வழியில், வேலூர் என்கிற கிராமத்தில் நடைபெற்றது. மாநாட்டின் தலைவராக கலைஞர் பொறுப்பேற்றிருந்தார். அடிப்படை வசதிகள் அவ்வளவாக இல்லாத சிறு கிராமமான வேலூரில் நடைபெற்ற மாநாட்டுக்கு, எதிர்பார்க்காத அளவு கூட்டம் திரண்டது. சேலம் மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சியைப் பறைசாற்றும் வகையில் அந்த மாநாடு அமைந்தது.

### திராவிடத்தால் வாழ்கிறோம்

542

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131